# கல்வெட்டு

*Kalvettu*

**திருவள்ளுவர் ஆண்டு 2041 ஆடித் திங்கள்**



உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை 2010 கண்காட்சியில்
தமிழர் பண்பாட்டை பறைசாற்றும் தொல்லியல் சான்றுகளை
தமிழக முதலமைச்சர்
**மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
பார்வையிடுகின்றார்

**கல்வெட்டு - காலாண்டிதழ் - 82 (ஜூலை 2010) விலை : ரூ. 10.00**
**தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை**

00091

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை 2010 கண்காட்சியை பார்வையிட்ட அமைச்சர் பெருமக்கள்





# பதிப்புரை

தொல்லியல் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்படுகின்ற ஆதாரங்கள், சமூக அரசியல் செய்திகளை வெளிப்படுத்தும் கல்வெட்டுகள், செப்பேடு குறிப்புகள் பற்றிய ஆராய்ச்சி கட்டுரைகளை ஒருங்கிணைத்து வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் பயன் அடையும் வகையில் வெளியிடப்படும் காலாண்டு இதழ் "கல்வெட்டு" நமக்கு தமிழர்களின் பண்பாட்டை வெளிபடுத்துகின்றது என்றால் அது மிகையாகாது. "கல்வெட்டு காலாண்டு இதழ்–82"இல் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளின் மூலம் பல முக்கிய செய்திகள் நாம் அறிகின்றோம்.

மெக்கன்சி அவர்களின் தொகுப்பில் ஒன்றான "ஊர் வரலாற்று சுவடிகள்" (கைபீதுகள் [பாரசீகசொல்]- குறிப்புக்கள்) மூலம் சென்னை மற்றும் மையிலாப்பூர் வாமநாதபுரம் என்று அழைக்கப்பட்டதையும், நேமிநாதசுவாமி கோயில் இருந்ததையும், அக்கோயிலில் சமணத்துறவிகள் தங்கியிருந்ததையும் அறிய முடிகின்றது. மேலும், இப்பகுதி பலமுறை கடலால் அழிக்கப்பட்டதையும் கைபீதி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலக்கியங்களில் மயிலாப்பூர் "மயிலை" என்றும் கல்வெட்டில் "மையிலாப்பில்" மற்றும் "மயிலார்ப்பு" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தொண்டை மண்டலத்தில் பல்லவர் மற்றும் சோழர்கள் காலகட்டத்தில் வேளாண் பயிர்களுக்கு வரி (காணம்) விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டதை பற்றிய குறிப்புக்கள் இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், செப்பேடுகளிலும் வசூலிக்கப்பட்ட வரிகளை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

விக்கிரம் என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 11–12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பௌத்த கற்சிற்பம் தஞ்சாவூர் மாவட்டத்தில் பௌத்த மதம் சிறந்து விளங்கியிருந்ததை பறை சாற்றுகின்றது. மேலும், இவ்வூரிலுள்ள ஸ்ரீதியாகராஜசுவாமி கோயில் கல்வெட்டு மூலம் இப்பகுதி வணிக நகரமாகவும், வணிகப் பெருவழியாகவும் திகழ்ந்திருந்ததை அறியமுடிகின்றது.

விஜயநகரப் பேரரசர் காலத்தில் சிதம்பரம் கீழைரதவீதியருகே வண்ணார் மடம் ஏற்படுத்திய விவரமும், அம்மடத்திற்கு கிருஷ்ணதேவராயர், அச்சுத

தேவராயர் காலத்தில் வெளியிட்ட கட்டளைகள் பற்றிய விவரங்கள் செப்பேடுகள் வாயிலாக அறிவது சிறப்பு அம்சமாகும். மற்றும் இக்காலக்கட்டத்தில் சமூகத்தில் வண்ணார் குலமக்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது. ஆதிச்சநல்லூர் மற்றும் கொடுமணல் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட செம்பினால் ஆன வடிகட்டிகளை (சாம்பிராணி கிண்ணம் என்று அறியப்படுகிறது) ஆய்வு செய்ததில் நெருப்புக்கோழி போன்ற பெரிய பறவைகள் தமிழ்நாட்டில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கக் கூடும் என்று அறியப்படுகின்றது. வியட்நாமை ஆண்ட சம்பா வம்சாவளி இந்திய நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதற்கு ஆதாரமாக அங்குள்ள கோயில்கள் மற்றும் சிற்பங்கள் இன்றளவும் எடுத்துயம்புகின்றது என்றால் அதில் ஐயமில்லை.

தமிழ்நாடு அரசு தமிழின் செம்மொழி மேன்மையை உலகம் அறிய வேண்டி ஜுன் 23 முதல் 27 முடிய 2010-இல் கோவையில் "உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை"ச் சிறப்புற நடத்தியது. தமிழர் தம் வரலாற்றையும், தனித்துவமான பண்பாட்டு மேன்மையையும், பாமரரும், படித்தவரும், அறிஞர்களும் அறிந்திடும் வகையில் மிகப்பெரிய அளவில் காண்போரைக் கவரும் வகையில் இக்கண்காட்சி அமைக்கப்பட்டது. அரசுத்துறைச் சார்ந்த ஒருங்கிணைப்பாளராக தொல்லியல் துறை ஆணையர் முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**, இஆப, அவர்கள் அரசால் நியமிக்கப்பட்டார். பாங்குற அமைக்கப்பெற்ற கண்காட்சி பொதுமக்கள் அனைவரின் வரவேற்பைப் பெற்றதால் மேலும் ஒரு வார காலத்திற்கு (ஜுன் 28 முதல் ஜுலை 4 வரை) நீட்டிக்கப்பெற்று பார்வையாளர்களைக் கவர்ந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. கண்காட்சி குறித்த ஒரு சில புகைப்படங்கள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்விதழின் பதிப்புப் பணியினை மேற்கொண்ட திரு. ஸ்ரீ. ஸ்ரீகுமார் தொழில்நுட்ப உதவியர், டிடிபி மற்றும் அட்டைப்பட வடிவமைப்பு, அச்சுப்பிழைத் திருத்தம் மற்றும் அச்சுப்பணியினை மேற்கொண்ட அச்சுப்பிரிவினரின் பணிகள் பாராட்டுக்குரியது. மேலும், கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி. சு. சம்பத், திரு. இரா. சிவானந்தம் ஆகியோர் நல்கிய பணிகள் சிறப்புடையதாகும். இக்கல்வெட்டு காலாண்டிதழிலுள்ள கட்டுரைகள் மற்றும் செய்திகள் தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயனுள்ளவையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

சென்னை -600 008
09-12-2010

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,**
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

# உள்ளே

வ.எண். பக்கம்

பதிப்புரை

1. சென்னை மாநகரின் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த தடயங்கள்
- முனைவர் சீ. வசந்தி 1

2. நாமகிரி பேட்டையில் வீரசைவம்
- முனைவர் தி.சுப்பிரமணியன் 7

3. சிதம்பரம் வண்ணார் மடம் குறித்த இரு செப்பேடுகள்
- ச.கிருஷ்ணமூர்த்தி 9

4. தொண்டை மண்டலத்தில் வேளாண் பயிர்கள் மீதான வரிகள்
- மூ.ஆ.ப. சரஸ்வதி 21

5. விக்கிரமம் - பௌத்த சிற்பம்
- ச. செல்வராஜ் 26

6. காவல் உரிமை மானியம்
- இரா. சிவானந்தம் 28

7. On Re-Assigning the Utilitarian value of Antiquities
- Dr. C. Maheswaran & S. Sreekumar 29

8. இந்தியாவைப் பின்பற்றி வியட்நாம்
- பா. வளர்மதி 34

சரபோஜி மன்னர் செப்புத் திருமேனி 36

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப., அவர்கள் சார்பாக வரலாற்றுக்கு முற்பட்டக்கால அகழாய்வாளர் (பொ.) ஸ்ரீ.ஸ்ரீகுமார் அவர்களால் வெளியிடப்பெற்றது.

இணையதளம் www.tnarch.gov.in

மின் அஞ்சல் tnarch@tn.nic.in

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை 2010 கண்காட்சியை பார்வையிட்ட அரசு உயர் அதிகாரிகள்





# 1

# சென்னை மாநகரின் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த தடயங்கள்

முனைவர் சீ. வசந்தி
பதிவு அலுவலர், சென்னை

தமிழகத்தின் தலைநகராகத் திகழும் சென்னை மாநகரில் தற்போது, எழும்பூர் நுங்கம்பாக்கம், மையிலாப்பூர், திருவல்லிக்கேணி, மாம்பலம் - கிண்டி, கோட்டை - தண்டையார்பேட்டை, பெரம்பூர் - புரசைவாக்கம் என்ற வட்டங்களை உள்ளடக்கியுள்ளது. பண்டையச் சென்னை பல சிறிய கிராமங்களை உள்ளடக்கி இருந்துள்ளதை பலக்கல்வெட்டுகளின் மூலம் அறியப்படுகின்றது.

சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களின் தொன்மையினை, இலக்கியங்கள், கல்வெட்டுகள், அகழாய்வுகளின் மூலம் அறிய முடிகின்றது. இக்கட்டுரையில் சென்னை மாநகரில் கிடைத்த மற்றும் இவ்வூர் குறித்து அறியப்படாத, அண்டை காலத்தில் அறியப்பட்ட தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த தடயங்களை குறித்து ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன.

முதலாவதாக, இதுவரை அச்சில் வராத 'ஊர் வரலாற்றுச் சுவடிகள்' என்ற தலைப்பில் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலையத்தில், ஏறத்தாழ நூற்று ஐம்பது ஊர் வரலாற்றுச் சுவடிகள், 'கைபீதுகள்' என்ற தலைப்பில் பாதுகாத்து வரப்படுகின்றன. இவை மெக்கன்சி அவர்களின் தொகுப்பாகும். கைபீது (Kalifiyat) என்னும் சொல், பாரசீகச் சொல்லாகும்; இச்சொல்லிற்கு கூற்று, சூழ்நிலைகள், குறிப்புகள், தொடர்புகள் எனப்பொருள்படும்.[1] பொதுவாக இவை ஊர் வரலாற்றை விளக்கிக் கூறுபவைகளாகக் கருதப்படுகின்றது.

அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி, கைபீது டி. 3123 இல்[2] சுவடியின் தலைப்பில் வாமனாதபுரம் அல்லது பழைய மயிலாப்பூரினுடைய மகாவிசேஷித்த கைபீது என்று குறிப்பிடபட்டுள்ளது. இதன் மூலம் தற்போது சென்னை, மையிலாப்பூர், வாமநாதபுரம் என்று வழங்கப்பட்டதாகவும், இங்கு நேமிநாத சுவாமி கோயில் ஒன்று சமணர்களால் வழிபாடு செய்யப்பட்டதும், அக்கோயிலில் சமணத்துறவிகள் தங்கியிருந்ததும் தெரிகின்றது. அவர்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை வெளியில் வந்து, அங்கயினமான சமணர்களின் இல்லத்தில் உணவு

உண்பர். இதில் இத்துறவிகள் உப்பு. பிளிப்பு (புளிப்பு) கைப்பு, (காரம்) நெய்ப்பு(நெய்) தவிர்த்து உண்டனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்துறவிகள் அல்லும் பகலும் பேசா நோன்புடன் கடுந்தவம் செய்துள்ளனர்.

இச்சுவடியில் குறிப்பிடத்தக்க வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தி, இச்சமண துறவிகள் ஒருவருக்கு, கனவில், வாமனாதபுரம் கடல் கொள்ளப் போவதாக அவ்வூர் அரசன் மயிலமானுக்கு அறிவித்து, எல்லா மக்களுடன், நேமிநாதர் சிலையுடன் வேறு இடத்திற்கு சென்றதாகவும், இவர்கள் சென்ற மூன்றாம் நாள் வாமனாதபுரம் கடலில் மூழ்கியதாக அறியப்படுகிறது. புதிய வாமனாதபுரத்தில் மக்கள் வசித்து வரும் பொழுது, புதிதான இப்பட்டினத்திற்கு தனது பெயரையும் இணைத்து மயிலமான் நகர் என்றும், புதிய நேமிநாதர் கோயிலையும் நிர்மாணித்தான் அரசன். இவ்வரசனுக்குப் பிறகு இப்பகுதியை மயில்பூசிதராசன், மந்தபத்திரராசன், சந்தகுணசீலன் மற்றும் (வ)ரமண்டனாதன் ஆகிய அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர் என்று தெரிகின்றது.

மறுமுறையும் இவ்வூர் கடல் கொள்ளப் போவதாகவும், நேமிநாதர் தனது திருமேனியை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லக்கூறி சமண முனிவர் கனவில் கூறியதற்கிணங்க. மயிலமான நகரத்திற்கு அருகில் உள்ள ஆப்பூரை சேர்ந்த பட்டிணத்திற்கு குடிபெயர்ந்தனர். பழயபெயரான மயிலமானகரருடன் ஆப்பூரை இணைத்து மயிலாப்பூர் என்று அழைக்கப்பட்டதாகவும், பின்னர் சோழ தேசத்திலிருந்து வந்த கணித, மாந்திரீகரது வன்மையால் அரசனை சைவச் சமயத்திற்கு மாற்றியதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், அரசன் சைவ மதத்தினைத் தழுவியதால், சமண சமயம் குன்றியதால், நேமிநாதரின் சிலை, சித்தாமூருக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், கொண்டு செல்லும் பொழுது அச்சு முறிந்து, சிலை சிறிது பின்னப்பட்டதாகவும் இச்சுவடியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் பல வருடங்களுக்குப் பிறகு, மயிலாப்பூரைச் சேர்ந்த கப்பல் வர்த்தகம் செய்த வணிகன் சித்தாமூரில் திருப்பணி செய்ததாகவும் தெரிகின்றது. இதே சுவடியில் ஏறக்குறைய 800 வருடங்களுக்கு முன், 600 வருடங்களுக்குப் பின் பழைய திருப்பத்தூர், மயிலாப்பூர், மகாபலிபுரத்தில் இன்னும் சமுத்திரத்தில் அருகில் உள்ள சில பட்டணங்கள் சமுத்திரம் கொண்டு போனதாகச் சொல்லிக் கொள்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.[3]

## சுவடியிலிருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் : அதனை உறுதி செய்யும் தொல்லியல் சான்றுகள்

1) மையிலாப்பூரில் சமணசமயம் சிறந்திருந்ததும் ஜெயின தீர்த்தங்கரரில் 22ஆவது தீர்த்தங்கரர் ஆன நேமிநாதருக்கு கோயில் இருந்துள்ளது என சுவடி மூலம் அறியப்படுகிறது.

## தொல்லியல் சான்று

1923-ஆம் ஆண்டு மத்திய தொல்லியல் துறை திகம்பர பிரிவைச் சேர்ந்த இரண்டு சமண சிலைகளை கண்டுபிடித்துள்ளன. (தற்பொழுது சென்னை

கோட்டையில் உள்ள மத்தியத் தொல்லியல் துறையில் நிழற்படங்களைப் பெறலாம்.) இச்சிலைகள் 40 செ.மீ. உயரமுள்ளன. ஒரு சிலை ஐந்து தலை நாகத்துடன் காணப்படுகின்றது.[4] இது பார்சுவநாதரின் சிலையாகும். அருள் தந்தை ஹோஸ்டன்[5] என்பவர் சாந்தோம் புனித தாமஸ் தேவாலயத்திற்கு அருகில் மற்றொரு சமண சிற்பத்தைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.[6]

சமண இலக்கியமான நேமிநாதன் என்ற தமிழ் நூலினை களநாட்டைச் சேர்ந்த குணவீரப் பண்டிதர் கி.பி 12-ஆம் நூற்றாண்டில் இதனை இயற்றியுள்ளார். இதனை அடுத்து கி.பி.14-ஆம் நூற்றாண்டில் திருநூற்றந்தாதி என்ற நூலை அவிரோத ஆள்வார் என்ற சமணப்புலவர் பாடியுள்ளார். இத்தொகுப்பில் முதல் பாடல் மயிலாப்பூரில் உள்ள நேமிநாதர் கோயில் பற்றியதாகும்.[7] இப்பாடலில் மையிலாப்பூரில் உறையும் இறைவனை மனித சமுதாயத்தின் மீது தமது கருணையினை பொழியுமாறு நூலாசிரியர் பிராத்தனை செய்கிறார்.

*பாடல் வரிகள்*

"மறமே முனிர்த்து மயிலாபுரி ரின்று மன்னுயிர்கட்டு
அறமே பொழியும் அருட்கொண்டவே . . . . . . . . . ."

இதைத் தவிர சில வெளியிடப்படாத பதிகங்களிலும் மையிலாப்பூரிலுள்ள நேமிநாதர் திருக்கோயில் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன.[8] நேமிநாதத்தினைப் பதிப்பித்த பதிப்பாளர், திருமயிலாப்பூரில் கடற்கரையோரம் அழகிய சமணக் கோயில் இருந்ததாகத் தெரிவித்துள்ளார். மேற்கண்ட சான்றுகள் கடற்கரையை ஒட்டி நேமிநாதர் கோயில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. கைபீது தெரிவிக்கும் கடல்கோள்கள், இச்சமணக் கோயில் அழிந்துவிட்டதை தெரிவிக்கின்றது. எனவே கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை மயிலாப்பூரில் சமணக் கோயில் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. கி.பி.15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அருணகிரிநாதர் திருப்புகழில் பழைய கபாலீசுவரர் கோயில் கடற்கரை ஓரம் இருந்துள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது.

2) மயிலாப்பூரினுடைய கைபீது, மயிலாப்பூரை வாமனாதபுரம் என்று முன்பு வழங்கப்பட்டதாகவும் பின்னர் இவ்வூரை ஆண்ட மயிலமான், பழைய ஊரை கடல்கொண்டதால், புதிய ஊரை நிர்மாணித்து அதற்கு தன்னுடைய பேர் ஙண்கு விளங்கும்படியாக மயிலமான்நகர் என்று பெயரிட்டு அதில் அஞ்சு சமண கோயில்கள் கட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே கைபீதில், மறுபடியும் கடல் மயில மாநகரை அழிக்க நேரிட்டபோது, மயிலமானகரம் சமீபத்திலிருந்த ஆப்பூரைச் சேர்த்து பட்டணமாக்கினதில் பழைய பெயருடன் சேர்த்து மயிலாப்பூர் என அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.[9]

இக்கருத்து சிந்திக்கத்தக்கதாகும், ஏனெனில் கி.பி. 7 - 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, திருஞானசம்பந்தர், திருமழை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் பாடல்களில், இவ்வூர் மயிலை என்று வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தரின்

பூம்பாவை பதிக்கத்தில் மாடமயிலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அக்கால கட்டத்தில் மயிலாப்பூர், மயிலை என்றே வழங்கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.[10] கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மூன்றாம் நந்திவர்மனின் காலத்திய நந்திக் கலம்பகத்தில்[11] மயிலை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. கலிங்கத்துப் பரணியிலும் "பண்டைய மயிலையும் பாடீரே" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அருணகிரிநாதரும் மயிலை என்றே கூறிச் சென்றுள்ளார். ஆனால் பெரியபுராணத்தில் திருமயிலாப்புரி என்று வழங்கப்பட்டுள்ளது. அப்பர் மட்டும் மைலாப்பில் என்று குறிப்பிடுகின்றார்.[12]

கல்வெட்டுகளில், இவ்வூர் மையிலாப்பில், மயிலார்ப்பு என்றே வழங்கப் பட்டுள்ளது. பல்லவ மன்னன் கம்பவர்மன் கல்வெட்டில்[13] மயிலார்ப்பு என இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிடந்தை கோயில் கல்வெட்டில் மையிலாப்பிலைச் சேர்ந்த வணிகன் ஒருவன் அக்கோயிலுக்கு அளித்த தானம் பற்றி தெரிவிக்கின்றது.[14] கி.பி. 12-ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளிலும் மயிலாப்பில் என்று வழங்கப்பட்டுள்ளது.[15]

எனவே இலக்கியங்கள் மயிலை என்றும் கல்வெட்டுகளில் மையிலாப்பில், மயிலார்ப்பு என்றும் வழங்கப்பட்டுள்ளது. பழைய கைபீது குறிப்பில், மயிலமான்நகர் என்றும், பின்னர் ஆப்பூர் என்ற அருகிலிருந்த இடத்திற்குச் சென்றதால் மயிலாப்பூர் என்று அழைக்கப்பட்டதாகவும் தெரிகின்றது. எனவே முன்பு கைபீதில் குறிப்பிட்டுள்ளபடி மயிலை, மயிலாப்பில் என்று வழங்கப்பட்டது. பின்னர் ஆப்பூர் என்ற ஊரின் பெயருடன் இணைத்து மயிலாப்பூர் என்று வழங்கப்பட்டிருக்கக் கூடும்.[16] பொதுவாக ஆய்வாளர்கள், மயில்கள் அதிகம் இப்பகுதியில் இருந்ததாகவும், அவை ஆர்ப்பரித்து நடனமாடியதால் இவ்வூர் மயிலார்ப்பு எனப்பட்டதாகவும் கருதுகின்றனர்.[17] இவ்வூருக்கு வந்த மார்கோபோலோ, ஜான் டி மரிக்னோலியும் இங்கு மயில்கள் அதிகம் இருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.[18] எனவே. இறைவி கற்பகாம்பாளும் மயில் வடிவிலேயே சிவபெருமானை கபாலீஸ்வரத்தில் வழிபட்டதாகத் தல வரலாறு கூறுகின்றது.[19] தலவரலாறுகள் பிற்காலத்தில் திருக்கோயில்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் எழுதப்பட்டவைகள். எனவே, இறைவி மயில் வடிவில் சிவபெருமானை இத்தலத்தில் வழிபட்டதாக புராண வரலாறு எழுதப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் கைபீது வழியாக மற்றுமொரு புதிய செய்தி மயிலாப்பூர் பெயர் காரணத்தினை அறிய முடிகின்றது.

3) கடற்கரையை ஒட்டி கோயில் இருந்ததற்கான தொல்லியல் சான்றுகள்:-

கைபீதில் சமணக்கோயில் இருந்த பகுதி இரண்டு முறை கடல்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இங்கிருந்த கோயில் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.[20]

இக்கூற்றினை உறுதி செய்யும் வகையில் கி.பி.1923-இல், சாந்தோம் கடற்கரைப் பகுதியில் மேற்பரப்பு ஆய்வும், அகழாய்வும் மத்திய தொல்லியல் துறை மேற்கொண்டது.[21]

இந்த ஆய்வில் கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த துண்டு கல்வெட்டு ஒன்று, தேவாலயத்தின் வடமேற்கு மூலையில் கண்டுபிடிக்கப்பட்டது.[21] இக்கல்வெட்டில் கூத்தாடுவான் ஆன நடராஜர் சன்னதியில் விளக்கெரிக்க நிலம் தேவதானமாக வழங்கப்பட்டமை அறியப்படுகின்றது.[22] மற்றொரு வடமொழி கல்வெட்டில் மயிலாப்பூர் கோயில் கருவறையில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான், பார்வதி ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதனை 1921-ஆம் ஆண்டு ஹோஸ்டன் என்ற பாதிரியார் கண்டுபிடித்தார்.[23] இதுபோன்று பிஷப் அவர்களின் இல்லத்தில் உள்ள கல்வெட்டில் திருமயிலாப்பூரில் திருப்பூம்பாவை என்ற இறைவி பற்றியும்,[24] மற்றொரு கல்வெட்டில் திருஇளம்பிறை உடையார் என்ற இறைவனுக்கு வழங்கப்பட்ட தானம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இங்கு கண்டெடுக்கப்பட்ட அழகிய தூண்களும் இப்பகுதியில் கோயில் இருந்ததற்கானச் சான்றாக உள்ளன.[25] எனவே இப்பகுதியில் முன்பு சமண கோயிலும் சைவகோயிலும் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

மேலும் இப்பகுதியில் நடத்தப்பட்ட தொல்லியல் அகழாய்வில் சிவப்புநிறப் பானை ஓடுகளும், சீன நாட்டுப் பானை ஓடுகளும், மத்தியத்தரைக்கடல் பகுதியைச் சேர்ந்த கூம்பு வடிவ பானை ஓடுகள் அல்லது ஆம்போரா பானை ஓடுகள் இங்கு கிடைத்துள்ளன. இவை ரோம் நாட்டிலிருந்து மதுவகைகளையும், ஆலிவ் எண்ணெயையும் கொண்டுவரப் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும். அகழாய்வில் கிடைத்தப் பொருட்கள் அனைத்தும் சாந்தோம் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மயிலாப்பூர் மத்தியத் தரைக்கடல் பகுதி நாடுகளுடன், குறிப்பாக ரோம் நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை இப்பானை ஓடுகளின் மூலம் அறிய முடிகின்றது.

மயிலாப்பூர் சிறந்த வணிகத் தலமாகத் திகழ்ந்ததற்குப் பலச் சான்றுகள் உள்ளன. போர்ச்சுகிசியர் கி.பி.1507 முதல் சந்தோம் பகுதி வரத் தொடங்கினர். கி.பி.16-ஆம் நூற்றாண்டில் சாந்தோம் முக்கிய போர்ச்சுகிசியரின் வணிகத்தலமாகத் திகழ்ந்துள்ளது.

முடிவாக, மெக்கன்சி அவர்களால் சேகரிக்கப்பட்ட வரலாற்றுக் குறிப்பில் எழுதி வைக்கப்பட்டுள்ள செய்திகள், செவிவழிச் செய்திகளாயினும் அவற்றில் உள்ள வரலாற்றுச் செய்திகள், மயிலாப்பூரில் மேற்கொள்ளப்பட்ட மேற்பரப்பு மற்றும் அகழாய்வுகள் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.

அடிக்குறிப்புகள்

1) The New Royal Persion Dictionary (1932)p.341
2) சௌந்திரபாண்டியன், எஸ். (பதிப்பாசிரியர்) தமிழக ஊர் வரலாறுகள், தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண். 75: 1995. பக்.4
3) மேற்படி, பக். 34.
4) Raman, K.V. The early History of the Madras Region. The C.P. Ramaswami Aiyar Foundation, Chennai-Reprint 2008, P-178.

5) Ibid. p.178.
6) Hosten, Rev H.Antiquities from SanThome and
7) Raman, K.V., op.cit. p.180.
8) ibid.
9) சௌந்தரபாண்டியன், பக்.35
10) Raman, K.V., op.cit. p.41.
11) நந்திக்கலம்பகம், வரிகள். 44. மற்றும் 51
12) தேவராம், 6-2-1
13) ARE.182/1912
14) ARE.274/1910
15) 333/1911, 355/1911, 161/1910, 256/1912
16. சௌந்தரபாண்டியன், பக்.35
17) Rama, K.V. op.cit. p.41.
18) ibid.
19. Tiruttonder puranam vol.V. note by திரு. C.M. இராமசந்திர செட்டியார்,பக். 1385-6.
20. சௌந்தரபாண்டியன், பக்.35
21. Annual Report of Archaeological survey, 1922-23, pp.120-121.
22. ARE.217/1923
23. Hosten op.cit. p.54-55
24. ARE.218/1923
25. Hosten op.cit. p.96

## 2

# நாமகிரிபேட்டையில் வீரசைவம்

முனைவர் தி. சுப்பிரமணியன்
உதவி இயக்குநர், மதுரை

கர்நாடகப் பகுதியில் உருவான வீரசைவம் இரு பெரும்பிரிவுகளைக் கொண்டது. இதற்கு சித்தகங்கா வீரசைவம் சிவகங்கா வீரசைவம் என்று பெயரிடப்பட்டுள்ளன. சித்தகங்கா வீரசைவம் காலத்தால் முற்பட்டது. இவை இரண்டும் தமிழகத்தில் பல இடங்களில் பரவியது. இதனால் தமிழகத்தில் பல பகுதிகளில் கோயில்களும், மடங்களும் உருவாக்கப்பட்டன. இத்தகைய மடங்களில் ஒன்று நாமக்கல் மாவட்டம், நாமகிரி பேட்டையில் இருந்தது. நாமகிரி பேட்டையில் இருந்த மடத்திற்கு ஈசானமடம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இங்கு வீரசைவ மத குருக்கள் தங்கியிருந்ததற்கான தடையங்கள் காணப்படுகின்றன.

வீரசைவர்கள் வழிபட்ட வீரபத்திரசாமி கோயில் ஒன்றும் இங்கு உள்ளது. இக்கோயில் சுமார் கி.பி. 17,18-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். தற்போது இக்கோயிலை புதுப்பித்துக் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. இங்கு இன்றும் வீரசைவர்களின் வழிவந்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

### வீரசைவ குருக்களின் சமாதிகள்

நாமகிரிபேட்டையில் உள்ள வடக்கு பேயர் காலணியில் செங்கற்களால் கட்டப்பட்ட பாதாள அறை ஒன்று தரைமட்டத்திலிருந்து 1 அடி உயரத்தில் காணப்படுகின்றது. இந்த அறை முற்றிலும் மூடப்பட்டிருந்ததால் இது எதற்காக கட்டப்பட்டது என்பது தெரியவில்லை. தற்போது இந்த அறையின் மேல் பகுதியிலிருந்த செங்கற்கள் உடைந்து பாதாள அறையின் உட்பகுதியில் விழுந்ததால் இது குகையைப் போன்று காணப்பட்டது. இதனால் இப்பகுதி ஆய்வு செய்யப்பட்டது.

செங்கற்கள் மற்றும் சுண்ணாம்பு கலவையைக் கொண்டு கட்டப்பட்ட இந்த அறை சுமார் 7 அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்டது. தரையிலிருந்து சுமார் 9 அடி ஆழத்தில் பெரிய குழி ஒன்று வெட்டப்பட்டுள்ளது. இக்குழியின் நான்கு பகுதிகளும் செங்கற்களின் துணையுடன் சுவர் போன்று கட்டப்பட்டுள்ளதால், இது பாதாள அறையைப் போன்று அமைந்துள்ளது. செங்கற்களின் மேல் சுண்ணாம்பைக் கொண்டு பூச்சு வேலை செய்யப்படவில்லை.

இந்த பாதாள அறையின் உட்பகுதியில் மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. மைய்ய அறை ஒன்றும் மற்ற இரண்டு பகுதிகளில் வடக்கிலும் தெற்கிலும் இரண்டு சிறிய பகுதிகளும் காணப்படுகின்றன. இந்த சிறிய அறையின் சுவற்றில் கிழக்கு பகுதியில் விளக்கு வைக்கும் மாடம் ஒன்று முக்கோண அமைப்பில் உள்ளது. இந்த அறையின் உட்பகுதியில் மனித எலும்புக் கூடு ஒன்று கிழக்கு பகுதியிலுள்ள சுவருடன் சேர்த்து அமர்ந்த நிலையில் இருந்துள்ளது. எலும்புக் கூட்டின் முன்பகுதியில் செங்கற்கள் கழுத்துப் பகுதி வரை ஒன்றின் மேல் ஒன்று அடுக்கி வைக்கப்பட்டும் எலும்பு கூடு மேற்கு நோக்கியும் இருந்துள்ளது. இதிலிருந்து உயிர் நீத்த உடலை அமர்ந்த நிலையிலும், மேற்கு நோக்கியும் அடக்கம் செய்துள்ளனர் என்பதும் உடல் சாயாமல் இருக்க முன் பகுதியில் செங்கற்களை அடுக்கி வைத்துள்ளனர் என்பதும் தெரியவருகின்றது.

இக்குழியில் வேறு எலும்புக் கூடுகள் காணப்படவில்லை. எனவே இது தனிமனிதனுக்கு எடுக்கப்பட்டது என்பதும் தெளிவு. வீரசைவ மதகுருக்கள் மட்டும் அமர்ந்த நிலையில் அடக்கம் செய்யப்படுகின்றனர் என்றும் மற்ற பிரிவுகளில் இவ்வாறு இல்லை என்றும் தர்ஸ்டன் தன்னுடைய "குலமும்குடியும்" என்ற நூலில் குறிப்பிடுகின்றார். இதைப் போன்ற பாதாள அறைகள் இப்பகுதியில் 4 அல்லது 5 இருந்ததாகத் தெரிகின்றது. மேலும் இந்த அறைகளின் அருகில் வீரசைவர்களின் மடமான ஈசான மடம் இருந்ததாகவும் கூறுகின்றனர். இதனால் இங்கிருந்த மதகுருக்கள் மடத்தின் அருகில் சமாதியாகி இருக்கின்றனர் என்பது தெரியவருகின்றது.

தமிழகத்தில் வீரசைவ மடங்கள் கி.பி. 13-ம் நூற்றாண்டிலிருந்து இருந்ததாகத் தெரிகின்றது. இதைப்பற்றி கூறும் கல்வெட்டுகளும் உள்ளன. மேற்கு கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரைக்கு செல்லும் பெருவழிகளில் ஒன்று நாமகிரிபேட்டை, ஆரகழூர் வழியாகச் சென்றுள்ளது. வியாபாரத்தின் பொருட்டு இங்கு தங்கி இருந்தவர்களிடையே வீரசைவம் பரவி நிலைபெற்றுள்ளது. இப்பகுதியில் இது மிகப்பெரிய மடமாக விளங்கியுள்ளது. கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டு வரை இங்கு வீரசைவம் நல்ல நிலையில் இருந்துள்ளது என்பதை இந்த சமாதிகள் எடுத்துக் கூறுகின்றன.

(நன்றி : நாமகிரிபேட்டை துரைசாமி ஆசிரியர் அவர்களுக்கு நன்றி.)

3

# சிதம்பரம் வண்ணார் மடம் குறித்த இரு செப்பேடுகள்

ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்லியல் அலுவலர்(ப.நி)

விஜயநகரப் பேரரசர்கள் பெருமளவில் செப்பேடுகளை வெளியிட்டுள்ளார்கள். எனினும் தமிழ்மொழியில் உள்ள செப்பேடுகள் மிகவும் குறைவேயாகும். அவ்வகையில் சமீபத்தில் சிதம்பரம் வண்ணார் சமூகத்திற்குரிய இரு செப்பேடுகள் கண்டறியப்பட்டன. விஜயநகரப் பேரரசர் காலத்தில் சிதம்பரம் கீழைரதவீதியருகே வண்ணார்மடம் ஏற்படுத்திய விவரமும் அம்மடத்திற்குக் கிருஷ்ணதேவராயர் காலத்திலும், அச்சுததேவராயர் காலத்திலும் அவர்கள் சிதம்பரம் நகருக்கு வந்தபோது கட்டளைகள் வழங்கிய விபரமும் இச்செப்பேடுகளில் உள்ளன.

இரு செப்பேடுகளில் ஒன்று மூன்று ஏடுகளைக் கொண்டதாய் முழுமையாக உள்ளது. மொத்தம் 222 வரிகளைக் கொண்டுள்ளது. மற்றோர் செப்பேட்டுத் தொகுதியில் ஓர் ஏடு மட்டுமே உள்ளது. விஜயநகர அரசர் மெய்க்கீர்த்தியும் சக ஆண்டு மட்டுமே இவ்வேட்டில் உள்ளது. இரண்டு செப்பேடுகளும் சகஆண்டு 1445ஐ குறிப்பிடினும் ஒன்றில் ஆனந்த ஆண்டும் மற்றொன்றில் ஈஸ்வர ஆண்டும் உள்ளன. விஜயநகர மன்னர்களின் வம்சாவளி முறை மாறி உள்ளன. திருமலை தேவ மகாராஜா ஒன்றிலும் சீரங்க தேவ மகாராயர் மற்றொன்றிலும் இடம்பெறுவதால் பிற்காலத்தில் அதாவது கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரு செப்பேட்டுத் தொகுதிகளும் வெட்டப்பட்டன என்பது உறுதியாகும். முழமையான செப்பேட்டின் முதல் ஏட்டின் தொடக்கத்தில் சிதம்பரம் தலத்துடன் தொடர்புடைய சிற்பங்களும் வண்ணார் சமூகத்துடன் தொடர்புடைய சிற்பங்களும் உள்ளன. குறைச்செப்பேட்டிலும் முதல் பக்கத்தில் மேற்படி சிற்பங்களே உள்ளன.

முழுமையான செப்பேட்டுத் தொகுதியில் வரலாற்று நிகழ்ச்சிகளுடன் வண்ணார் சாதியின் தோற்றம் குறித்த புராணமும் கூறப்பட்டுள்ளது. தட்சன்

மேற்கொண்ட யாகத்தை அழிக்க வீரபத்திரரை ஈஸ்வரனும் பத்திரகாளியை, ஈஸ்வரியும் தோற்றுவித்தனர். தட்சனும் தேவர்களும் தேவிகளும் மாண்ட பின் சிவன் அவர்களுக்கு மீண்டும் உயிர்தந்தபோது அவர்கள் மேனியில் இருந்த இரத்தக்கறை நீங்க வீரபத்திரர் மரபில் வீரமணவாளர் தோற்றுவிக்கப்படுகிறார். இம்மரபில் திருக்குறிப்புத் தொண்டர் பிறந்தார். திருவண்ணாமலையாருக்கு இம்மரபில் பெண் கொடுத்துள்ளார். சமூகத்தில் வண்ணார் சாதிக்குரிய மரியாதைகள் கூறப்படுகின்றன.

சிதம்பரம் வண்ணார் மடத்தின் நீளம் 60 அடி அகலம் 15 அடி ஆகச்சுற்றளவு 150 அடியாகும். மடத்தின் செலவுகளுக்காக 8 மாக்காணி நிலம் வழங்கப்படுகிறது. மடத்துடன் மணவாள விநாயகர் கோயில் ஏற்படுத்தப்பட்ட விபரமும் செப்பேட்டில் உள்ளது. செப்பேடு வெளியிட்டபோது மடத்தின் தலைவராக யார் இருந்தார் என்ற விபரமும் உள்ளது. கிருஷ்ண தேவராயர் சிதம்பரம் வந்தபோது அவருடன் அவருடைய ஊழியனாகிய குருவப்ப வண்ணாரும் வருகிறார். இவரே வண்ணார்மடம் சரியாக இயங்காததை மன்னரிடம் முறையிடுகிறார். வண்ணார்களுடன் நான்கு மடாதிபதிகளும் மூன்று தீக்ஷதர்களும் ஒரு பிள்ளைமாரும் மற்றவர்களும் கூடி மடம் நன்கு செயல்பட முடிவெடுக்கின்றனர்.

அச்சுததேவ மகாராயர் சிதம்பரம் கோயிலுக்கு வந்தபோது அவருடன் அவருடைய வண்ணார் ஊழியர்கள் மூவர் உடன் வருகின்றனர். சிதம்பரம் வண்ணார் மடத்திற்கு வரவேண்டிய நெல் வாரம் ஒழுங்காக வராததால் வண்ணார்கள் மகமை வழங்க முடிவெடுக்கின்றனர். குடிக்கொரு பணமும் திருமணத்தின்போது மணமகனும் மணமகளும் தலா ஒரு காசு வழங்கவும் உடன்படுகின்றனர். மடத்தின் தலைவர் வரும்போது தங்குவதற்கு விடுதிவசதியும் உணவுக்கும் ஏற்பாடு செய்வதாகச் சம்மதிக்கின்றனர். செப்பேட்டின் இறுதியில் மடத்தன்மம் மேற்கொள்பவர் பெறும் பலன்களும் எதிராக இருப்பவர் எய்தும் துயரங்களும் கூறப்படுகின்றன. செப்பேட்டில் சிதம்பரத்தின் சிறப்புகள் விரிவாகக் கூறப்படுகின்றன. சிவலிங்கம், நந்தி, முத்தலைச் சூலம், சூரியர் சந்திரர் இருபெண்களுடன் மடாதிபதியின் உருவம், துணி துவைக்கும் கல் போன்ற சிற்பங்கள் வரையப்பட்டுள்ளன. தற்போதுதான் வண்ணார் சமுகத்திற்கு உரிய இரு செப்பேடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

## சிதம்பரம் வண்ணார் செப்பேடு - 1

### முதல் ஏட்டின் முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீ உஙு உஹா உணடலெஸ்வரஙு
2. அரிய ராயத் தளவிபாடன் வரஸெஷவ
3. ந் தப்புவ ராயிரக் கண்டன் மூவராயிர
4. கண்டன் கண்ட நாடு கொண்ட ந
5. ாடு குடாதான் எம்மண்டலமும்
6. கொண்டு ஈழங் திறை கொண்டு
7. இராதி ராசன் ராச பரமேஸ்வரன்
8. துட்ட நிக்கிறக சிட்டபரிபாலன் அசுவ
9. பதிநரபதி கெசபதி கெடிமன்னிய க
10. ாததாணன் ராச பரமெசரன் இராசமாத்த
11. ாண்டன் ராச கெம்பீரன் இராசதேவே
12. ந்திரன் மித்துருக்கள் தோழன் சத்துரு
13. க்கள் கண்டன் பூலோக புரந்த
14. ரன் [1]மேலோ புகழ் சுந்தரன் பூலோக
15. பரிபாலன் கோதண்டராமன் இந்து

### முதல் ஏட்டின் பின் பக்கம்

16. ராய சுர [2]தாணன பதினெட்டு
17. க் கோட்டத்து மன்னிய கண்ட
18. ன் தொண்டத்துக்கு அதிபதியா
19. ன நரலோகர் கண்டன் பாண்டிம
20. ண்டலத் தாபநாசாரியுடன் சோழம
21. ண்டல தெக்ஷணாசாரியன் ம
22. த்த கெசவீரன் சுத்தபரி நகு
23. லன் வில்லுக்கு விசையன் அறத்[துக்கு]
24. அரிச்சந்திரன் ஆண்மைக்கு அனு
25. மார்[3] ஆய்க்கு சுக்குறீவன் குடை
26. க்கு கன்ன[ன்] பிலத்துக்கு வாயு பக
27. வான் ஆண்ட குடிக்கும் புயயன்
28. பூவ-தெக்ஷண பச்சிம உத்தர சுத்த ச
29. முத்திராதி பதி[4] திக்கு வண்ட்டை கண்

30. டருளிய ஸ்ரீவீரப்ரதாபமுள்ளச
31. ஜுதெவ உஹாராயர் மல்லிகார்ஜு
32. னதெவ உஹாராயர் சீரங்கதெ
33. தவ உஹாராயர் கிஷ்ணதெவ உஹா
34. ராயர் ப்ருதிவி ராச்சியம் பண்ணி
35. அருளாநின்ற [5]சகா தசாசயிரு
36. இதன்மேல் செல்லாநின்ற ஆ
37. னந்த ஸூ பங்குனி மீ யிரு உ உத்தி
38. ராடா நக்ஷத்திரமும் பூறுவபக்ஷத்துதெ
39. தமியும் சகலபாக்கிய யோக
40. மும் பெற்ற[6] ஆதிற்றவார நாள் வ
41. டகரை ராசாதிராச வளநாடு வெ
42. ண்ணையூர் நாடு[7] வழுதளம் பட்டு
43. ச்சாவடி தனியூர் பெரும் பெற
44. றப் புலியூர் பூலோக கயிலாசம
45. ான சிதம்ப ரேசுரன் சன்னதியி
46. யில் வீர மணவாளருக்கு மடமு[ண்]
47. டாக்கி மடதன்மம் நடக்க
48. வேணு மென்று வீரமணவ
49. ாளர்கள் பிறப்பு பாருல கெத்து
50. நாரதரம்மை சயிலமேலாதிகி
51. ய கயிலைவாழ் பரமன் கண்ட
52. யுடனெ மண்டல தன்னி
53. லயிடந்துரு புதுமை நடந்த
54. தென்ன

## இரண்டாம் ஏட்டின் முன் பக்கம்

55. சீரணி மகிழ்ந்து நாரதர் சொல்வாரதக்க[7]மாபூர
56. லில் மிக்கமா நகரில் தக்கன் சிவனுக்குசெய்
57. கரும் பூசையில்லை யென்று யாகம் செய்ய
58. நாண்டெனென்று நார[தர்] சொன்னாரார்யீசுரிய
59. ாரும்[8] பக்கற்றில் யிருந்தவள்யெழுந்துரிந்துசி
60. வனை வணங்கி தக்கன்[9] யாகற்றுக்கு நான்போ

61. ய் வருகிறே னென்று பாங்கிமார் சூழ ஓங்கும்
62. [10]விமானற்றில் எழுந்தருளி[11] தற்றன் யாக சாலை
63. யில் எழுந்தருளி தக்கன் முன் சென்று யீசுரிய
64. ாரும் சிவனை யிகழ்ந்து யாகம் பண்ணக்
65. க[ா]ரண மெதன்று கேட்டார் ஈசுரியாரை
66. தக்கன் [12]பாற்து உம்மையுமிகழ்ந்தோம்
67. நில்லாமல் போமென்றான் அன்னேர
68. மே கயிலாசமே போய் தக்கனை அழிக்க
69. வேணுமென்று சுவா[மி] உடனே விணண
70. ப்பஞ்செயதாள் சுவாமி வீரபற்றிரனைநினைத்தா
71. ர்அன்னேரம்[13] பதினெட்டாயுதற்றுடன் வணங்
72. கினார் யீசுரியாரிட கோவாக்கினியில்[14] பற்றிர
73. காளிஸ்பரி பிறந்தாள்[15] வீரபற்றினும் பற்றிரகாளியு
74. ம் பணிவிடை யேது என்று கேட்டார்கள்[16] கற்றம்
75. ாபுரிக்குப் போய் தக்கனை[17] அழிற்றுவருவீர் உங்களி
76. [18]டற்றில் நாமேயிருந்து வரம் தருவோம் போங்கோ
77. ளென்று வீரனும் தேவியும் விடைகொண்டார்
78. தக்கமா புரியில் போய்த் தக்கன்யாக சாலையில் இரண்
79. டாயிரம் பூதப்படை[ை]ய புறக்காவல் வைற்றுசிவனுக்
80. கு பூசையில்லாமல் போகவேணுமென்று யாக(ஞ்)செய்
81. யகாரணமென்று கேட்டார் சிவனுக்கு செய்தரும்பூ
82. சையில்லை நில்லாமல் போமென்றார் முப்பற்று முக்
83. கோடி தேவர்களுளல்லாரும் கேட்டுயிருந்தார்கள்
84. உங்களுக்கெல்லாம் உத்தாரம் தானோயென்றுே
85. கட்டார். எல்லாத் தேவர்களஞ்(சி)யொன்றுஞ் சொல்
86. லாமல் யிருந்தார்கள்[19] வீரபற்றிரன் முனிந்தும்வாயில்
87. வெற்றிச் சங்கு நாற்றிறார் பூதங்களும் யாகசாலையில்
88. புகுந்து வீரபத்திரனை மிகவும் வணங்கி மெற்றப்பசி
89. க்குது வீரா யென்றளவில்[20] வீரபற்றிரன் முனிந்து தே
90. வர்களையெல்லாம் வெட்டியும் குற்றியும் அவாரவ
91. ர[21]கேற்ற[22] ஆய்க்கினை பலவுஞ்செய்தார் பற்றீசுர எழுந்
92. திருந்து வேதிவல்லியும் வருமிந்திராணி முதலான பெ

93. ண்களையெல்லாம் நாக்கை அரிந்தும் முலையே
94. அரிந்தும் தலையே எரித்தும் இப்படிசகல ஆக்கி
95. னையும்ப் பண்ணிநார் வீரன் கயில் வாளினா லே
96. லதக்கன்தலையே அரிந்து ஓம[23] குண்டற்றிலே எ
97. றிந்தான் தக்கனுடை யாக[ம்][24] அழிற்றுவீரனும் தேவியு
98. ம் சி[வ]னை நினைக்கில் சிவன்[25] தோணினார் எல்லாதே
99. வர்களையும் யெழுப்ப வேணுமென்று[26] யிசைற்றா
100. ர்எல்லாரையுமெழுப்பி தக்கனும் ஆட்டுதலை னை
101. யயொட்டி எழுந்திடாயென எழந்திருந்தான் எல்
102. லார்மேல் தோய்ந்து திரம் போக வருணனை[27]அ

## இரண்டாம் ஏட்டின் பின் பக்கம்

103. ழைற்று வருஷிக்க சொன்னார் வத்திரங்களில்பட்ட[உ]திரம்
104. [28]போகாது கண்டு[29] வீரபற்றிரன் மரபில் ஒருவனை[30] உற்பற்றி
105. ஆக்கி வீரனென்று பேரும் குடுற்று அஞ்சுமணிபலகை
106. கயும் அணி தும்பை மாலையும் வாகை மாலையும் யுடு
107. த்திமுவெள்ளை வட்டக்குடையும்[32] யிஷபக்கொடியும்
108. [33]குடுற்று எல்லா விருந்தும்[34] குடுற்று பின்[35] கிஷ்ணனிடற்
109. றில்[36] கிற்றி பெற்றவீரமணவாளர் காசியம்பதி[யி]ல்
110. ருஷிகளடத்திற்[37] கீற்றிபெற்று[38] திருக்குறுப்புத்தொண்
111. டர் மரபில் பிறந்த வீரமணவாளர் பிணியணியு
112. ம் அண்ணாமலைப் பரமருக்கு பெண்[39] குடுற்றருமுன்பே
113. சுதமிழ்தெரிநின்ற உப்பையை[40] வளாற்று நற்பெரு
114. மரபில் வந்தோர் வீசைகொண்ட வீச்சிலன்
115. தலைகொண்டோர் ஆடலம் பரிகொடிபடையுடன்
116. பிறமிடப்[41]பொருதிமதயானையின் கோடுதனை அட
117. ராப்பறித்தோன் வெகுசோழன் மகிழ்கலிங்கப்ப
118. தியை[42] வெண்ணோர் வெள்ளானை மீதேறி வீரம்ப
119. டைத்தோர் பண்டு கண்ணாளாரிருபந்தலில் சா
120. கரமல் பறையனுயிர் காத்தோர் பஞ்சவன்தொழி
121. லுடையோர் குருபாதம் மறவாதசேகர் அஞ்சுமணிக்கை
122. கயாத கண்டன் தும்பையிலு துய்யான் துறைமிதிறி
123. பாகி வாங்காமல்லிரண[43] நிற்றிய மல்லிராயன் மனனா

124. ரோரைந்து மணிக்கு அசையாதகண்டன் ஒன்னாவெ
125. ட்டிய[44] உற்றண்டகெம்பீரன்[45] அன்னாளிலெண்ணு
126. [46]அறுபற்று மூவரில் பேறு பெற்ற கன்னாவுதாரன்யில
127. ங்குகிற தீண்டோளலங்காரமும் தம்பிரான் கோயி
128. லுளங்காரமும் நலஞ்செய்வேந்தர்யில்லந்துவா
129. ரமும் நிறனிற்றிமத் தேரலங்காரமும்தலங்க ளெல்லா
130. ம் ஏழுதலங்களமும் சகைவேந்தர்தடம்புயமீதிலே
131. அலங்கம்தோயும் துவாரயதியின் அமுதுவாசகர்
132. நீடூழிவரவே தொண்டமண்டலம் சோழமண்டல
133. ம் பாண்டி மண்டலம் னாலு[47] தேசற்றிலுண்டா
134. கிய வீரமணவாளரும் கூடி[48] மடங்கட[ா]பிற்றுல்லி
135. யமாக நடந்து[49] வந்துது ஒருகாலற்றிலேலயம் பிற
136. ந்து போச்சுது அதின்பிறகு கிஷ்ணராயர்சிதம்பரம் சேவி
137. க்க வந்தார் அவருக்கு ஊழியம் பண்ணுகிற குருவப்பவ
138. ண்ணா[ன்][50] கூடிவந்தான் சாதிமடம் விழுந்துபோகபே
139. ாமோயென்று கிஷ்ணராயருக்குவிண்ணப்பஞ்செய்து
140. அந்தப்படிக்கு[51] தலற்றாரை அழைற்று மடங்கட்
141. யிடுங்கோளென்று விண்ணப்பஞ்செய்தார[52]தான்
142. ற்றாடும் மேலை மடற்று முதலியாரும்[53] கீழைமடற்று
143. முதலியாரும் மாளி[கை]மடற்று முதலியாரும் மாகைமட
144. ற்று முதலியாரும்[54] ஆறிசண்டசுரநயினாரும் குறிரைசே
145. மல் சொக்கரும் திருவாபரண முதலியாரும் பண்டரி
146. தீக்ஷதர்லோகநாததீக்ஷதர் கஞ்சுக நாததீக்ஷதர்பெரி[பி]
147. ள்ளை மற்றுமுண்டானதான மயேசுரரும்திருவாய்
148. மலந்தருளி[55] வீரமணழ்வாளருக்கு மடமா[ன]துகீ
149. ழைக் கோபுர வா[ச]லில் வடதுண்டில் புகழாபர
150. ணன் வீதியர் இண்டந்[56]தேரு வீறில் கீழ்சிறகில்
151. சேக்கிழையான் கையில் கொண்டுடைய

**மூன்றாம் ஏட்டின் முன் பக்கம்**

152. மனைதெற்க்கு வடக்கு அடி கூயி அடி ஒன்றுக்கு
153. [57]யிரு ஆக அடி கூயி ாருயி க்குகொண்டு

154. மடமுங்கட்டி மணவாளபிள்ளையார்கோ
155. யிலும் கட்டி[58] மடற்றுக்க எட்டுமாக்காணி நிலமும்
156. கல்லு எழுதி நாட்டி அஞ்சுதுளிகை பிரசாதமும்
157. ஓற்றி[59] பிடிச்சு குடுற்று மட்மும் பிறவல்லிய
158. மாக நடந்து வந்துது அதன்பிறகு அந்த[60]நிற்றிய
159. னெல்லும் சுவந்திரமும் குடாமல் போனார்கள்
160. அச்சுதராயர் சிதம்பரம் சேவிக்கவந்தார் அவரு
161. க்குஊழியம் பண்ணுறவிசையராகுவண்ணான்
162. [61]மூற்றி வண்ணான் ராமலிங்க வண்ணான் இவ[ர]கள்
163. எல்லாரும் கூடி[62] மடற்றிலே வந்து சுவாற்றியம்
164. கெட்டு தலற்று உற முறையாரையு மழைற்று உ
165. ற்றரிய வண்ணான் தேமாச வண்ணான் அரலாட்ட
166. ம்[63]தவிற்றபெரு வண்ணான ராசண்ணான பிரம
167. வண்ணான் தயலா வண்ணான் சங்கெதி ஆக
168. கொண்டான் புவனேசுவீரன்பட்டணம்
169. [64]அவற்றிவண்ணான் இவர்கள்யெல்லோரும்
170. கூடி அச்சுத ராயருக்கு விண்ணப்பம்செ
171. ய்து முன்னாள் நடந்த சுவந்திரமெல்லாம்
172. [65]விடிவிச்சுகுடுற்றி சந்திரகாவி வேலைக்குதிரு
173. க்கைவழக்கமும் அஞ்சுபணம் கட்டளை யிரு
174. கல நெல்லும்[66] மடற்று மூதேசற்றில் சாதியா
175. ருக்கெல்லாம் புண்ணியமாகக் குடிக்கொரு
176. பணமும் கலியாணத்துக்கு மாப்பிள்ளைவீடு
177. ஒருபணமும் பெண் வீடு ஒருபணமும் யிந்த
178. ப்படி[67] அன்பத்தாறு தேசத்தில் சாதியார்வெள்
179. ளை[68] வேலைக்காறர் சாயக்காரர் யிரங்கொல்லி
180. குஞ்சிரமுதலிகள் துவராபதியான நாலு தேசத்
181. திலுண்டானசாதியாரும் கூடிநமசிவாயபன்
182. டாரத்தின் குமரர் பரமானந்த பண்டாரத்தையு
183. ம் கட்டளை பண்ணி சந்திராதித்தவரையும்[69] புற்றி
184. ர புற்றிர பாரம்பரையும் யிது ஹெதாரர் ஊத்தமா
185. ய்தாமே எங்கள் மடதன்மம் பரிபாலியம்

186. பண்ணிக் கொண்டு மணவாளப்பிள்ளை
187. யாற்கு அபிஷேக[70]னெய் வெற்றியமும் பண்
188. ணிக்கொண்டு திருவிளக்குநந்தவனாப் பணி[இரண்]
189. டையும் நடத்தி வரக்கட்டளையிட்டபடியினாலே
190. லமடற்றுபண்டாரம் எழுந்தருளின உடனே
191. எதிர்கொண்டு[71] அழைற்று வந்துவிடுதியும் வி
192. ட்டு அசநர காரியமும்[72] விசாரிற்று குடிக்கொ
193. ருபணமும் வரியும்[73] குடுற்று வெகுமானற்றுடே
194. ன அனுப்பவும்[74] பண்டாரற்றின் ஆணைக்கு உள்ப
195. ட்டு நிறகவும் இந்தப்படிக்கு யாதாமொருவர் கா
196. ணிக்கை குடாதவனையுற முறையெல்லோ
197. ரும்[75] அபதாரம் வாங்கி சாதி[76]பிறம்பபோடக்கட
198. வாராகவும் இந்தப்படி சாதியார்[77] பாற்றானைதப்
199. பாது இந்த தன்மத்தை பரிபாலியம் பண்ணின
200. பேர்கள் சிவகெங்கைத்தானம் பண்ணின

**மூன்றாம் ஏட்டின் பின் பக்கம்**

201. பலனும் சிதம்பரேசுரநை[78] சேவிற்ற பலனு
202. ம் சிவகாமி அம்மையை[79]சேவிற்ற பலனும் தில்
203. லை கோவிந்தராசரை[80] சேவிற்ற பலனும்பெறு
204. வார்கள் இந்[த][81]தறற்மத்துக்கு[82] அகுதம்பண்
205. ணினபேர்கள் கெங்கைக் கரையிலே
206. காராம்பசுவைக் கொண்ண தோஷற்றிலு
207. ம் தன் மாதாபிதாவை கொண்ண தோஷ
208. த்திலே போவார்கள் குருக்களைக்கொண்
209. ண தோஷத்திலே[83] போவார்காள்[84]தெய்வ
210. ப்பிராமணரைக் கொண்ண தோஷற்றி
211. லே போவார்காள் திருக்கோயில்மட
212. ங்களை தீயிட்ட தோஷத்திலேபோவார்
213. [85]இந்தற்ற தன்மத்தை அதிகபரிபாலியம் ப
214. ண்ணின பேர்கள் சாலோக சாமீப
215. சாரூப[86]சாருச்சியம்பதம்பெத்து புண்ணி
216. யவான்களாய் நீடுழிவாழ்ந்து சுகமேயிரு

217. ப்பார்கள்[87] சிதம்பரம் காரணாசாரி சட்டை
218. யான் கைஎழுத்து[88] திருச்சித்தம்பலம்
219. [89]ராயபாளையம் செஞ்சிமதுரைதஞ்சா ஊர்
220. னாலு ராசாக்களுக்கும் ஊழியம் பண்ணுகு
221. குற பண்டாரப் பெருவண்ணார் கட்டளை
222. யிட்ட தன்மம்

**அடிக்குறிப்புகள்**

1. மேலோர் என்று படிக்க
2. தானன் என்று படிக்க
3. அனுமான் என்று படிக்க
4. திசைவேட்டை என்று படிக்க
5. சகாத்தம் என்று படிக்க
6. ஆதித்த வார
7. வழுதலம்பட்டு விஜயநகரப் பேரரசில் வழுதலம் பட்டு சீர்மையில்தான் சிதம்பரம் இருந்தது
8. பக்கத்தில் இருந்தவள் என்க
9. யாகத்துக்கு என்க
10. விமானத்தில் என்க
11. தட்சன் என்க
12. பார்த்து என்க
13. பதினெட்டாயுதத்துடன் என்க
14. பத்திரகாளி என்க
15. வீரபத்திரனும் பத்திரகாளியும் என்க.
16. சுத்தமாபுரி என்க.
17. அழித்து என்க.
18. உங்களிடத்தில் என்க.
19. வீரபத்திரன் என்க.
20. வீரபத்திரன் என்க.
21. அவரவர்க்கேற்ற என்க.
22. ஆக்கினைபலவும் செய்தார் வீரபத்திசுரர் என்க.
23. குண்டத்திலே என்க.
24. அழித்து என்க.
25. தோன்றினார் என்க.

26. இசைத்தார் என்க.
27. அழைத்து என்க.
28. போகாதது என்க.
29. வீரபத்திரன் என்க.
30. உற்பத்தி என்க.
31. குடுத்து என்க.
32. ரிஷபக்கொடி என்க.
33. குடுத்து என்க.
34. குடுத்த பின் என்க.
35. கிருஷ்ணனிடத்தில் என்க.
36. கீர்த்தி என்க.
37. கீர்த்தி என்க.
38. திருக்குறிப்புத் தொண்டர் என்க.
39. குடுத்தாரும் முன்
40. வளர்த்த என்க.
41. பொருது என்க.
42. வென்றோர் என்க.
43. நித்தியமல்லிராயன் என்க.
44. உத்தண்ட கெம்பீரன் என்க.
45. அந்நாளிலெண்ணும் என்க
46. அறுபத்து மூவரில் என்க.
47. தேசத்திலுண்டான என்க.
48. மடங்கள் தாபித்து துல்லியமாக என்க.
49. வந்தது ஒரு காலத்திலே என்க.
50. கூடவந்தான் என்க.
51. தலத்தாரை அழைத்து என்க.
52. தானத்தாரும் மேலைமடத்து என்க.
53. கீழைமடத்து முதலியாரும் மாளிகைமடத்து முதலியாரும் மாகைமடத்து முதலியாரும் என்க
54. ஆதிசண்டிகேஸ்வரநயினாரும் குதிரை மேல் என்க.
55. வீரமணவாளருக்கு என்க.
56. தேர் வீதியில் என்க.
57. அகலம் என்பதற்குக் குறியீடு உள்ளது. மணையின் சுற்றளவுக்குக் குறியீடு உள்ளது.
58. மடத்துக்கு என்க.
59. பிடிச்சுக்குடுத்து மடமும் பிரபல்யமாக நடந்து வந்தது என்க.

60. நித்திய நெல்லு என்க.
61. மூர்த்தி என்க.
62. மடத்திலே வந்து சுவாத்தியம் கெட்டுதலத்து உறவு முறையாரையும் அழைத்து என்க.
63. தவித்த என்க.
64. அவத்தி வண்ணான் என்க.
65. விடுவிச்சுக் குடுத்த என்க.
66. மடத்து மூன்று தேசத்தில் என்று பொருள்
67. ஐம்பத்தாறு என்க.
68. வேளைக்காரர் என்க.
69. புத்திரபௌத்திர என்க.
70. நெய்வேத்தியம் என்க.
71. அழைத்து வந்து விடுதியும்விட்டு அசனகாரியமும் என்க. தங்குமிடத்தையே விடுதி என்கிறது. அசனம் - உணவு
72. விசாரித்து என்க.
73. குடுத்து என்க.
74. பண்டாரத்தின் என்க.
75. அபராதம் என்க.
76. புறம்பே போடக்கடவாராகவும் என்க.
77. பாறந்தானம் தப்பாது என்க.
78. சேவித்த என்க.
79. சேவித்த என்க.
80. சேவித்த என்க.
81. தற்மத்துக்கு என்க.
82. அகிதம் என்க.
83. போவார்கள் என்க.
84. தெய்வப் பிராமணரைக் கொன்ற தோஷத்திலே என்க.
85. இந்த தற்மத்தை என்க.
86. சாயுச்சியம் என்க.
87. சிதம்பரம் காரணாசாரி சட்டையான் செப்பேடு வெட்டியவன் என்க.
88. திருச்சிற்றம்பலம்
89. ராஜபாளையம் என்பதை விஇராய வேலூரரையே ராயபாளையம் சுட்டும்
90. தஞ்சாவூர் என்க.

# 4

# தொண்டை மண்டலத்தில் வேளாண் பயிர்கள் மீதான வரிகள்

**மு.ஆ.ப. சரஸ்வதி**
தொல்லியல் துறை

தொண்டை மண்டலத்தில் பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் நிலத்தில் விளையும் வேளாண் பயிர்களுக்கு வரி விதிக்கப்பட்டு மக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டன. அவை நெல், எள்ளு, பாக்கு, தென்னை, பனை ஆகியவை ஆகும். ஒவ்வொரு குழுவினரிடமிருந்து பெறப்பட்ட வரிகள் பற்றிய தகவல்கள் இலக்கியங்களை காட்டிலும் கல்வெட்டில் மிகுதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் மருத்துவர்கள் செலுத்தியதாக எவ்வகை வரியினையும் கல்வெட்டில் காணமுடியவில்லை, ஆனால் மருத்துவப் பொருட்களாகப் பயன்படுத்தப் பெற்ற செங்கொடி, கல்லாலகாணம், கரிசிலாங்கண்ணி, குவளை நடுவரி, குவளைக்காணம் ,தென்னை அகிய பொருட்டுகளுக்கு வரிவிதிக்கப்பட்டதை கல்வெட்டுகள் மூலமாகவும் செப்பேடுகள் வாயிலாகவும் அறியமுடிகின்றது.

"செங்கொடியக் காணமும் கால்லாலக் காணமும்
கண்ணிட்டுக் காணமும் கதிர்க்காணமும்
விசாக்காணமும் குசாக்காணமும்"[1]

(நந்திவர்மனின் காசாக்குடி செப்பேடு)

"கண்ணிட்டுக் காணமும் கல்வெட்டுக் காணமும்
செங்கொடிய் காணமும் ஆட்டுக் காணமும்
நாவிதக் காணமும் குவளைக்காணமும்"[2]

(இரண்டாம் நந்திவர்மனின் புல்லூர்ச் செப்பேடு)

"முஞ்சாடிப் பொன்னுங் காருந் தெங்கும் பொன்னும்
உபகரணத் தண்டமும் மதிகரணத் தண்டமும்"[3]

(இரண்டாம் நந்திவர்மனின் புல்லூர்ச் செப்பேடு)

அக்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் விஷக்கடி மருத்துவர் இருக்க வகை செய்யப்பட்டது. உத்திரமேரூரில் இதுபோல் விஷக்கடி மருத்துவர் அமர்த்த ஊர்சபையார் நிலத்தை தானமாக அளித்துள்ளனர். பார்த்திவேந்திர மன்னன் காலத்தில் இவ்வாறு கொடுக்கப்பட்டதை கல்வெட்டு கூறுகிறது. இந்த நிலத்தை விஷவுரபோகம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

அரசுக்கு வேளாண்மையில் கிடைக்கும் வரிகளில் பெரும்பாலும் நெல்லிலிருந்து அதிகமான வரிகள் கிடைக்கின்றன. நிலத்தில் விளையும் நெல்லிலிருந்து 6-ல் 1 ஒரு பங்கு வரியாக வசூல் செய்கின்றனர். ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்ப வரி வசூலிப்பதும் உண்டு. நஞ்சை, புஞ்சை, நத்தம், கொல்லை, கோட்டம் போன்ற நிலத்திற்கு ஏற்ப வரி வசூலிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலம் இரண்டு போகம் அல்லது மூன்று போகம் வேளாண்மை தன்மைக்கு ஏற்ப வரி வசூலிப்பதும் உண்டு. அவை கார்த்திகை அரிசி[4], கார்த்திகை பச்சை[5], கார்கடமை[6], கூற்றரிசி[7], கூற்றுநெல்[8], நஞ்சைக்கடமை[9], புஞ்சைக்கடமை[10]. நெற்கடமை[11], வேலிக்காசு[12]. வேலிப்பயறு[13], வேளாண்வெட்டி[14], செந்நெல்[15], அமஞ்சி[16] என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதைத் தவிர வெற்றிலை, வாழை இலை இவற்றின் மீது வரி வசூல் செய்யப்பட்டுள்ளன. அவை "இலைக்கூலம்[17]" என்று பெயர்.

## செங்கொடிக் காணம்

செங்கொடி என்ற மூலிகைக்கு வழங்கப்பட்ட வரி மூலிகை காணம் ஆகும். மூலிகை காணம் என்பதற்குப் பொருள் பாகம், பொன் என்று கழக அகராதி பொருள் தருகின்றது.[18] பங்கு என்ற பொருளில் காணம் பயன்படுத்தப்பட்டுள்ளதைச் செப்பேட்டின் ஆங்கில மொழியாக்கப் பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன. பல்லவர் செப்பேடுகளான காசாக்குடி, புல்லூர் செப்பேட்டிலிருந்து செங்கொடிக் காணம் என்பது செங்கொடிக்காக அரசுக்கு செலுத்திய பங்குவரி என்று தெரிகிறது.

## செங்கொடி

அக்கினிக் கோல், சித்திரமூலம், கொடுவேலி என்று வாகட அகராதியும்[19], செங்கொடி என்பது சேகம் என்று மருத்துவப் பெயரகராதியும்[20], கொடிவேலி என்று சரசம்ஹிதையும்[21], செங்கொடியிம் வேறு பெயர்களைக் குறிப்பிடுகின்றன.

## கல்லால காணம்

பல்லவர் காலத்தில் விதிக்கப்பட்ட மற்றொரு வரியின் பெயர். இது கல்லால என்பது கல்லால மரம் என்ற மரவகையுள் ஒன்றாகக் கழக அகராதி பொருள் தருகின்றது.[22] ஆல் என்பதற்கு ஆலமரம், நஞ்சு என்று பொருள் கூறப்படுகின்றது. வேறு தகவல் எதையும் அறியமுடியவில்லை. ஆயினும் இதுவும் செங்கொடியினைப் போன்றே நஞ்சை நீக்குவதற்காகப் பயன்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

### கண்ணிட்டுக் காணம்

கண்ணிட்டுக் காணம் என்பது கரிசிலாங்கண்ணி பயிர் செய்வதற்காகப் பயிரிட்டோர் அரசுக்கு செலுத்திய வரியாகும். கண்ணிட்டுக் காணம் என்பது ஒரு வகை வரி என்று தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி பொருள் தருகின்றது.[23] இதனைக் கரிச்சை, கார்மணி என்று வாகட அகராதியும்[24], அத்திக்கண்ணி, மகாநிலம் என்று மருத்துவப் பெயரகராதியும் குறிப்பிடுகிறது.[25]

### கரிசலாங்கண்ணி

இது நிலத்தின் மீது படர்ந்து பரவும் சிறு செடி வகையாகும். இந்த செடி மஞ்சள் காமாலையை குணப்படுத்தும் மருந்து செடி வகையாகும். இதனை பயிரிட தொண்டை மண்டலத்தில் அனுமதி வாங்கவேண்டும் என்றும் அதற்கு வரியும் செலுத்த வேண்டும் என்று செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### குவளைநடுவரி குவளைக் காணம்

குவளை, குவலயம் என்றும் நெய்தல் என்றும் அழைக்கப்பெறுவதைப் பச்சிலை அகராதி கூறுகின்றது[26], இதனை நடுவதற்கு அரசிடமிருந்து உரிமைபெற வேண்டியிருந்துள்ளது என்பதைக் குவளைநடுவரி என்ற வரி பெறப்பட்டதிலிருந்து அறியமுடிகிறது. இதைப் போன்றே விளைவிக்கப்படும் குவளைக்கும் வரி செலுத்தப்பட்டிருப்பதைக் குவளைக் காணம் எனும் வரி செலுத்தப்பட்டிருப்பதன் மூலம் தெரியவருகிறது. இவ்விரண்டு வரியும் நந்திவர்மனின் 22ஆவது ஆட்சி ஆண்டில் பெறப்பட்டுள்ளன.[27]

### தென்னை

தென்னையிலிருந்து இறக்கப்படும் கள்ளும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் இறக்கப்படும் கள்ளிற்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது. அரசின் அனுமதி இல்லாமல் தென்னையின் மீது ஈழவர் ஏறக்கூடாது என்பதை

> "இவர்கள் மனமிறை ஈழவரெறப்
> பெறாதாராகவும் . . . . ."
>
> (தெ.க.தொ. 2 ப. 509)

> "இவ்வூரெல்லையிற் றெங்கும் பனையும்
> பூவரேற்ப பெறாதவராகவும் . . . . .
>
> (தெ. க. தொ. 2, ப.521)

என்று வரும் செப்பேட்டுப் பதிவுகள் வழி அறியமுடிகிறது. தென்னையுடன் பனையை இணைத்துக் கூறுவதனால் பனையிலிருந்தும் கள் இறக்கப்பட்டதையும் அதற்கு வரி விதிக்கப்பட்டிருந்தது என்பதையும் அறியமுடிகிறது. தென்னை, பனை, பாக்கு மரத்தை வெட்டினால் அரசுக்கு அபராதத் தொகை கட்டவேண்டும் என்று செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன.

இவையன்றி தமனகம், இருவேலி, செங்கழுநீர் ஆகியவை அரசு அனுமதியுடன் பயிரிடப்பட்டிருந்ததையும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**செங்கழுநீர் புறம்**

செங்கழுநீர் நீரில் வளரக்கூடிய ஓர் அல்லிப் பூவகையாகும். இதன் மலர் பூசைக்கும் கிழங்கு சாதாரணமாக உண்பதற்கும் வேர் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றது. செங்கழுநீர் விளைவிப்பதற்கும் அரசிடமிருந்து உரிமை அல்லது அனுமதி பெற்றுள்ளனர். செங்கழுநீர் பயிரிடுவதற்காக அரசு நிலமானியம் வழங்கியிருப்பதை கல்வெட்டு தெரிவிக்கின்றது. அந்நில மானியத்தைச் செங்கழுநீர் புறம் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

"கண்ணாற்று மூன்றாம் சதுரத்து செங்கழுநீர்
புறமாக விட்ட நிலம் அரைமாவும்"[28]

என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறு மூலிகைகள் பயிரிடுவதற்கு அரசிடமிருந்து உரிமை பெற்று அப்பொருட்களுக்கான வரி செலுத்தப்பட்டதையும், மருந்துப் பொருட்கள் பயிரிடுவதற்கு அரசு நிலத்தை மாண்யமாக (புறமாக) விட்டதையும் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் உள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றிலிருந்து அறியமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக்.168
2. மேலது. பக்.194
3. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி I க.எ. 61, 62
4. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 1 க.எ. 61, 62
5. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 12 க.எ. 221
6. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 12 க.எ. 202
7. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 7 க.எ. 96
8. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 7 க.எ. 98
9. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 7 க.எ. 98
10. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 7 க.எ. 145
11. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 8 க.எ. 3
12. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 1 க.எ. 61
13. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 12 க.எ. 202
14. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 8 க.எ. 76
15. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 8 க.எ. 76
16. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 1 க.எ. 149
17. கழக அகராதி பக். 319

18. வாகட அகராதி பக். 4, 23, 47
19. மருத்துவப் பெயரகராதி பக்.60
20. சரகசம்ஹிதை தொ.உ.ப.77
21. கழக அகராதி பக். 296
22. கல்வெட்டுச் சொல்லகராதி
23. வாகட அகராதி பக்.13, 16
24. மருத்துவப் பெயரகராதி பக். 100, 143
25. பச்சிலை மூலிகை அகராதி பக். 24
26. தெ.க.தொ. 29, 173, 129, 150
27. தெ.க.தொ. 2 க. எ. 73
28. தெ.க.தொ. 13 க. எ. 203, வேலூர்பாளையம் செப்பேடுகள் பக்கம் 257



நாகப்பட்டினம் மாவட்டம், திருஇந்தளூர் செப்பேடு வேதியியல் பிரிவினரால் தூய்மைச் செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

# 5

# விக்கிரமம் - பௌத்த சிற்பம்

**ச.செல்வராஜ்**
உதவி இயக்குநர், தஞ்சாவூர்

## அமைவிடம்

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் பட்டுக் கோட்டையிலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள விக்கிரமம் எனும் கிராமம். இக்கிராமத்தில் பௌத்த கற்சிற்பம் ஒன்று திரு. சண்முகவேல் தகப்பனார் பெயர் சந்திர வேளாளர் அவர்களது நிலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

## புத்தர் சிற்பம்

புத்தர் சிற்பம் அமர்ந்த நிலையில் தியானம் செய்யும் அமைப்பில் அமர்ந்துள்ளார். சுருள்முடி, நீண்ட காதுகள், தலைமுடியில் சுவாலை அமைப்பு, உடலில் ஆடை இவை புத்தர் சிற்பம் என்பதை தெளிவுபடுத்துகின்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பல பகுதிகளில் புத்தர் சிற்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றை ஒருங்கினைத்து தஞ்சை மராட்டியர் தர்பார் மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் பௌத்த துறவிகளின் வருகை இருந்துள்ளது அதனை ஆதரித்துள்ளனர் என்பதும் தஞ்சை இராஜராஜேஸ்வரம் கோயிலில் ஆங்காங்கே காணப்படும் புத்தர் சிற்பம் நமக்கு எடுத்தியம்புகின்றன.

எனவே பட்டுகோட்டை வட்டம் விக்கிரம கிராமத்திலும் அமர்ந்த நிலையில் யோக வடிவில் காணப்படும் புத்தர் சிற்பம் உயரம் 1.25 மீ அகலம் 1.00 மீ உள்ளன. உடலில் ஆடை காட்டப்பட்டுள்ளது. இப்பௌத்தச் சிற்பம் சிற்ப அமைதியின்படி கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். கல்வெட்டுச் சான்றின்படி அக்காலத்தில் இவ்வூர் விக்கிரமசோழபுரம் என அழைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயில் கல்வெட்டில் "விக்கிரம சோழபுரத்து நகரத்தாரும் பெருநகரத்தாரும்" என்ற குறிப்பு காணப்படுகிறது. எனவே இது ஓர் வணிக நகரமாகவும் வணிகப் பெருவழியாகவும் இருந்திருக்க

வேண்டும் பூம்புகார் மயிலாடுதுறை - பெருஞ்சேரி வழியாக நாகப்பட்டினத்தை ஒரு பிரிவினரும் மயிலாடுதுறை - கும்பகோணம் - தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை - விக்கிரமம் - வடசேரி மற்றும் மன்னார்குடியை ஒரு பிரிவினரும் அடைந்திருக்கலாம். எனவே பௌத்த துறவிகள் விக்கிரமம் கிராமத்தில் தங்கி தங்களது பணியை ஆற்றியுள்ளனர் என்பதை இச்சிற்பம் மூலம் அறியமுடிகின்றது.



# 6

# காவல் உரிமை மானியம்

**இரா. சிவானந்தம்**
கல்வெட்டாய்வாளர்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டத்தில் கழுமரம் - கோட்டகம் எனும் ஊரில் மலையமான் பள்ளிக்கு அருகேயுள்ள நிலத்தில் இரு சிறு பாறைகள் உள்ளன. இவ்விரு பாறைகளில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் இரு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவ்விரு கல்வெட்டுகளும் கண்டறியப்படாத புதியக் கல்வெட்டுகளாகும். இப்பகுதியில் காவல் உரிமை பெற்றிருந்த வாணதராய முதலியாருக்கு அருந்தாமுலையம்மன் பாளையத்து ஆலம்மை கண்ணாறில் மானியமாக நிலம் வழங்கியச் செய்தியை கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. மற்றொன்று அம்மன் பாளைய எல்லையைக் குறிக்கின்றது.

## கல்வெட்டு வாசகம்

1. ஸவ஼வதாரி வருஷம்
2. ஆவணி மீ՞ய உஅருந்தா
3. முலயம்மன் பாளையம்
4. ஆலம்மை கண்ணறில்
5. வாணதருய முதலியார
6. வர்க மானியத்து ௵
7. வடக்கு ௵ எழு . .



1. அம்மன் பாளைய
2. எல்லை

1. யிதுக்கு
2. [வ*]டக்கு

(இக்கல்வெட்டு, கல்வெட்டு சிற்றெழுத்தர்களான திரு. கு. அன்பழகன் மற்றும் திரு. ம. துரை ஆகியோர்களால் படியெடுக்கப்பட்டது.)

# 7

# On Re-Assigning the Utilitarian Value of antiquities

## (A Case Study of the Megalithic Sieve Cups of Bronze unearthed from Adichanallur & Kodumanal)

Dr. C. MAHESWARAN*
&
S. SREE KUMAR**

### O. Introduction

A variety of grave goods such as ceramics, iron implements, bronze objects, semi - precious stone beads (& rarely gold articles) were unearthed from the megalithic burial sites of Tamilnadu both during Pre Independence & Post-Independence Periods.

To start with, the excavationists and or the experts usually assign a probable utilitarian value to such unearthed antiquities based on the available similar contemporary artefacts. In the absence of such contemporary availability, they are compelled to engage themselves in scientific guessing which sometimes seems to be re-assigned on the basis of some vital clues identified on a later stage.

In this paper, the authors having identified a vital clue from the megalithic sieve cup of bronze unearthed from Kodumanal (during Post- Independence) could re-assign the utilitarian value to it and consequently its akin antiquities unearthed from Adichanallur (during pre-Independence).

* Curator, Anthropology Section, Government Museum, Chennai.
** Technical Assistant, Prehistory Section, Department of Archaeology, Chennai.

**I. The Grave Goods of Bronze : A Short Account**

The first excavation carried out in India was at Adichanallur[1], a megalithic burial site which yielded a number of bronze objects (such as mother goddess figurine[2], bronze terminals[3], sieve cups[4], bells, rings, apart from gold diadems[5], ceramics, iron tools, semi-precious stone beads.

During 1983, the first District Collector of the Nilgiris arranged for unearthing of more than 40 megalithic burial sites in and around the Nilgiris[6]. Consequently, the megalithic Nilgiris yielded a number of interesting bronze bowls[7], a set of collyrium rods & a lotus bud shaped collyrium receptacle - as items of bronze, in addition to other kinds of antiquities.

At Kodumanal (another megalithic burial site at the Erode District of Tamilnadu)[8] several fascinating antiquities of bronze such as tiger figurine (embedded with precious stones)[9], sieve cups[10] were unearthed, apart from other varieties of grave goods, viz., ceramics, inscribed potsherds, iron objects, semi-precious stone beads.

**II. A Note on the Sieve Cups unearthed from Adichanallur**

An array of sieve cups unearthed from Adichanallur by A. Rea (1915) and displayed at the refurbished gallery of Prehistory of Government Museum, Chennai reveals that the Sangam Age Tamils of that arena have excelled in metallurgical skills of fabricating paper -thin bronze bowls and technological skills of perforating precisely such thin surface with concentric circles.

Such perforations of the cups are believed to be of utilitarian value and consequently they are named so, namely, 'sieve cups'. And these sieve cups of Adichanallur are globular in shape at the bottom and provided with wide opening at the proximity, without any distinct rim of projection.

**III. An Account of the Sieve Cups unearthed from Kodumanal**

In two of the several excavations that were carried out (during 1985-1997) at Kodumanal, altogether three sieve cups were unearthed. The presence of self-emerging designs of perforations and a distinct extension of rim-like projection from the dome shaped cup are the two exclusive characteristics of Kodumanal sieve cups. While the shape of Kodumanal sieve cups appear as a Cap with their perforations which spread all over the dome from a long petalled flower with a series of ostrich[11] positioned beneath each petal.

The sieve cup acquired by Department of Archaeology from Kodumanal is identified as the 'toddy filter'.

## IV. Discussions on the Sieve Cups of Adichanallur & Kodumanal

The sieve cups of Adichanallur and Kodumanal differ considerably both from the points of view of contour and self-emerging designs of perforations. That is to say, while the Adichanallur varieties exist shapewise as partial globe the Kodumanal types display an elongated globe with extension of rim-like structure, making it look like a cap.

The Adichanallur varieties (of sieve cup) present perforated concentric circles as their self-emerging designs whereas the Kodumanal types (of sieve cup) exhibit long petalled flower, with a series of ostrich on the lower end of each petal.

Although, both the Adichanallur varieties and that of the Kodumanal types are referred to commonly as 'strainer' the series of ostrich depicted in the Kodumanal sieve cups give a clinching evidence that the dome shaped should be in upright position[12] and thereby they could not have been used as 'strainer'; Rather, they could have been utilized as 'frankincense chamber' so as to release the fragrant smoke slowly, in a controlled manner.

## V. Conclusion

Presence of the motifis of ostrich (in perforation) on Kodumanal sieve cups has tempted the scholars to ascribe it foreign origin rather than assigning indigenous origin.

It will be quite appropriate here to corroborate that the prehistoric rock art sites of North India have yielded beads made out of ostrich egg shell and thereby we could infer that the population of ostrich was prevalent in the Indian Peninsula during Prehistoric Period.[13]

Unearthing of well preserved articulated fossil bone remains of a rhinoceros near Sathangulam in the Tirunelveli district of Tamilnadu[14] strengthen this contention that Tamilnadu once remained as a homeland of fauna such as rhinoceros, ostrich.

(Note : Thanks to M. Arun, Sthapathy for providing photographs)

## FOOT NOTES

1 This was executed fifteen years prior to the second excavation that was taken up at Harappa and Mohenjadaro of the Indus Valley Civilization.

2 Although the figurine of mother goddess unearthed from Adichanallur was a stray

find it is kept in one of the cabinets of strong room at Government Museum, Chennai, considering its significance as the earliest metal image of Southern India.

3 The bronze terminals are multi-tiered structures revealing that the aesthetics of Sangam Age Tamils was in high profile, with figurines of cock or ram or tiger or flower bud fixed on radiating rods attached to the centrally located columnar structure.

4 Such sieve cups were acquired in multiples from Adichanallur while there were only three finds from Kodumanal.

5 The gold diadems are designated as 'netri pattam' in the local parlance. While such diadems are till date tied over the forehead of brides & bridegrooms by their respective maternal uncles and or brothers-in-law in most of the districts of Tamilnadu in the Tirunelveli district alone they are tied over the forehead of deceased person by their daughters-in-law and or grand daughters.

6 In response to the request of authorities of Indian Museum, Calcutta to various District Collectors of the British India, J.W. Breeks has executed this excavation. Interestingly, the antiquities unearthed in the excavation were not sent to the Indian Museum but retained at the Madras Presidency itself. The reason for this retention was not Known and recorded anywhere.

7 A unique bronze bowl fashioned in the shape of sacred ash receptacle which bears much more embellishments of floral motifs crafted by chisel work is kept in the safe custody of strong room at Government Museum, Chennai, considering its significance & rarity.

8 The different institutions that took part in the excavations carried out at Kodumanal in various phases are (i) Tamil University, Thanjavur, (ii) Department of Archaeology, Government of Tamilnadu and (iii) Department of Ancient History & Archaeology, University of Madras.

9 The tiger figurine of bronze is in the possession of Tamil University, Thanjavur.

10 A bronze sieve cup acquired so is kept in the reserve collection of Department of Archaeology, Chennai.

11 This information was received through personal discussion with Mr. K.S. Sampath, Epigraphist, Department of Archaeology, Chennai.

12 The rim of the sieve cups is relatively thicker than the body of perforations.

13 For details Cf. Chakravarthi, K.K (Ed.) Rock Art of India (1984), New Delhi: Arnold Heineman.

14 The complete set of articulated fossilized skeletal remains of rhinoceros was housed in the reserve collection of Geology Section, Government Museum, Chennai.

**SELECT BIBLIOGRAPHY**

Chakravarthi, K.K. (Ed.) 1984. Rock Art of India, New Delhi: Arnold Heineman.

Maheswaran, C. 2009. "Archaeological Excavations of Adichanallur:" "Their Significances & Future Perspectives" (Mimeo.). Paper presented at the 'Seminar on

Archaeological Excavations of Tamilnadu : Significations of Adichanallur & Future Perspecives. Chennai : Central Institute of Classical Tamil & E.V. Ramasamy - Nagammai Educational & Research Trust.

Rajan, K. 1984. Kodumanal Excavations : An Introduction (in Tamil). Thanjavur: Manno Pathippagam.

Rea, A. 1915. Catalogue of Prehistoric Antiquities from Adichanallur and Perumbair, Chennai : Government Museum.

Subbarayalu, V. & K. Rajan 1992. Kodumanal Excavations 1985- 1991(Unpublished Report). Thanjavur : Department of Epigraphy & Archaeology, Tamil University.

## Colophon

The authors of this paper wish to record their deep sense of gratitude to Dr. T.S. Sridhar, I.A.S., Principal Secretary / Commissioner of Archaeology & Museums, Government of Tamilnadu who remains as a constant source of inspiration and encouragement for all their research activities.



# 9

# இந்தியாவைப் பின்பற்றி வியட்நாம்

**பா. வளர்மதி**
தொல்லியல் துறை

ஆசிய நாடுகளில் ஒன்றான வியட்நாமுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு மற்றும் கலாச்சாரம் இன்றுதொட்டு அல்ல முதலாம் நூற்றாண்டு முதல் [1st Century CE] தொடர்கிறது. முதலாம் நூற்றாண்டு முதல் 15-ஆம் நூற்றாண்டு வரை இந்திய வம்சாவளியைச் சார்ந்த புனான் முடியரசாக (Kingdom of Funun) விளங்கியது. இதில் முக்கிய அரசமரபினர் சாம் வம்சாவளியினர் (Cham Dynasty) சம்பா (Champa) அரசு ஆட்சியாளர்களாகும். இவர்கள் 2-ஆம் நூற்றாண்டு முதல் 15-ஆம் நூற்றாண்டு வரை பலமுறை ஆட்சி செய்த இந்தியா வம்சாவளியாக கருதப்படும் முடியரசர்கள் ஆவர். அவர்களுக்கு முன் வியட்நாம் சீன அரசர்களால் ஆளப்பட்டது. இந்தியாவிலிருந்து வாணிகம் நிமித்தமாக கடல்கடந்து வியட்நாம் சென்றவர்கள்தான் சம்பா வம்சாவளியினர் என்றும் கருத்து உள்ளது. அவர்கள் காலத்தில்தான் இந்தியாவிலிருந்து அறிஞர்கள், போராளிகள் வியட்நாம் அழைத்துச் செல்லப்பட்டனர். அதனால் அங்கு இந்திய கலாச்சாரம், கட்டிடக்கலை மற்றும் சமஸ்கிருத மொழிகள் இந்திய முறைப்படி வளர்ச்சியுற்றன. அதன் எடுத்துக்காட்டாக இன்றளவும் அழியாமல் இருக்கின்றது சம்பா சிற்பக்கலை [Champa sculptures]. இங்கிருந்து சென்ற சேதியக் கலைஞர்கள் (ஸ்தபதிகள்) சேதியக் கட்டிடக்கலையை வியட்நாமில் பயன்படுத்தி பல கோயில்களை நிர்மாணித்தனர். அந்த கோயில்கள் இன்றும் வழிபாட்டில் உள்ளன.

வியட்நாமிற்கு சென்று வந்த கடலாடிகளால் சீனாவின் மூலம் வியட்நாமிற்கு பரவிய புத்தமதம் இந்தியாவிலும் பரவியது. அதுதான் ஹீனயானா [Hinayana] என்று கூறப்படும் புத்தமதக் கோட்பாடுகள். ஆனால் சீனா பின்பற்றியது மஹாயானா புத்தமத கோட்பாடுகள் [Mahayana] ஆகும். சீனாவில் இருந்து வியட்நாமுக்கு வந்த புத்தபிட்சுகள் [Buddhist monks] மருத்துவம், தந்திரம் மற்றும் போர் பயிற்சி முறைகளையும் அறிந்தமையால் அவர்களால் சிறந்த மருத்துவர்களாகவும், போர்ப்பயிற்சி ஆசிரியர்களாகவும் பரிமளிக்க முடிந்தது. அவர்கள் மூலிகை மருந்துகள் மற்றும் மூலிகை மருத்துவத்தில் சிறந்து விளங்கியதால் தங்களது மருத்துவ சேவையுடன் சேர்த்து புத்தமத கோட்பாடுகளை வியட்நாமில் பரப்பினர்.

நமது கட்டிட தொழில்நுட்ப கலைஞர்கள், அறிஞர்கள் வியட்நாமில் அணைகள், கால்வாய்கள் மற்றும் விவசாய சீரமைப்பு முறைகளை நமது சேர, சோழ, பாண்டிய அரசர்களது வழியில் அங்கே நிர்மாணித்தனர். இறந்தவர்களைப் புதைக்கப் பயன்படுத்தும் முதுமக்கள் தாழி இந்தியாவிலிருந்துதான் வியட்நாம் கொண்டு செல்லப்பட்டன. அது இன்றும் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டு இந்தியத் தொடர்புக்குச் சான்றாக உள்ளது.

15-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு வியட்நாம் இஸ்லாமியர்கள் வசம் சென்றடைந்தது. ஆனாலும் இன்றளவும் இந்திய மற்றும் வியட்நாம் உடனான கலாசாரம், வர்த்தகம் தொடர்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதாரம் : வலைதளம்

Ref: www.ancient worlds. net





# சரபோஜி மன்னர் செப்புத் திருமேனி

மராட்டிய மன்னர்கள் இறைவனின் திருமுன்பு எப்போதும் இருந்தவாரே வழிபடவேண்டும் என்ற சீரிய நோக்கில் தமது உருவங்களை கற்சிற்பங்களாவும் செப்புத் திருமேனிகளாகவும் வடித்து இறைவன் சன்னதிகளில் அமைத்திருந்தனர்.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம், கும்பகோணத்தில் உள்ள சக்கரபாணி கோயிலில் மராட்டிய அரசர் மற்றும் அவரது மகளின் செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றது. இவை சென்னைப் பதிவு அலுவலரால் செப்புத் திருமேனிகள் பதிவுப் பணியில் பதிவு செய்யப்பட்டவை.

முனைவர் **சீ. வசந்தி**
பதிவு அலுவலர்
சென்னை



உயரம் 191 செ.மீ.



உயரம் 89 செ.மீ.

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை 2010 கண்காட்சியை பார்வையிட்ட வெளிநாட்டு பிரமுகர்கள்





# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை 2010 கண்காட்சியை பார்வையிட்ட அமைச்சர் பெருமக்கள்



